ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொலைபேசி : 044– 25670769
நிகரி : 25675849
இணையதளம் : www.tnrd.gov.in

**கடிதம் (நிலை) எண். 143, நாள் 22.12. 2009**

அனுப்புநர்
திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15. வழியாக)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை – 108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை– 6/18/35.
உறுப்பினர் – செயலாளர், மாநிலத் திட்டக்குழு, சென்னை – 5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 108.
அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகம், சென்னை–9.

அய்யா / அம்மையீர்,

பொருள் : திட்டங்கள் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2009–2010–ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது – நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம் வெளியிடப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009.
2. அரசாணை (நிலை) எண். 90, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.8.2009.
3. ஆணையர், சென்னை மாநகராட்சி கடிதம் க.து.ந.களண். பி6/2493/2009, நாள் 23.11.2009.

––––

பார்வை 3–ல் உள்ள கடிதத்தில் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 19 சதவீதம் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதிகளுக்கென ஒதுக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் 2009–10ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ரூ.32.30 இலட்சம் ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது என்றும், மேலும் அரசாணை (நிலை) எண். 61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009ல் குறிப்பிட்டவாறு ஊரகப் பகுதிகளில், ஆதிதிராவிடர் மக்கள்

வாழும் பகுதி, பிற இனத்தவர் வாழும் பகுதி என பிரிக்க முடியும் என்றும் அவ்வாறு மேற்கொள்ளும் பணிகளால் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மக்கள் அதிக அளவில் பயன் பெறுகின்றனர் என்றும், ஆனால் நகர்ப்புற பகுதிகளில் ஒவ்வொரு குடியிருப்பு பகுதிகளிலும் ஆதிதிராவிடர் மக்களோடு பிற இன மக்களும் சேர்ந்து வாழ்வதால் ஆதிதிராவிடர் மக்கள் வாழும் பகுதி, பிற இனத்தவர் வாழும் பகுதி என தனித்தனியாக பிரிக்க முடியாத நிலையில் உள்ளது என்பதால், அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி 19 சதவீதம் நிதியினை ஒதுக்கி பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது என்றும் தெரிவித்து, நகர்ப்புற பகுதிகளில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் குடிசை பகுதி மக்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதால், நகர்ப்புற சட்டமன்ற தொகுதிகளில் குடிசை பகுதியில் வாழும் மக்கள் பயன் பெறும் வகையில் அப்பகுதிக்கு இந்நிதியினை பயன்படுத்த சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 19 சதவீதம் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி அல்லது குடிசை பகுதிகளில் வாழும் மக்கள் பயன் பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட ஏதுவாக வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான திருத்தம் வெளியிடுமாறு அரசிடம் கோரி உள்ளார். சென்னை மாநகராட்சி ஆணையரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலனை செய்து, ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது.

2. அதன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 19 சதவீத நிதியினை நகர்ப்புறங்களில் குடிசைகளில் வாழும் மக்கள் (Slum People) பயன் பெறும் பொருட்டு அப்பகுதிக்கும் ஒதுக்கீடு செய்யும் வகையில் பார்வை 1–ல் உள்ள அரசாணையில் வெளியிடப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் கீழ்கண்ட திருத்தத்தை அரசு வெளியிடுகிறது

## திருத்தம்

அரசாணை (நிலை) எண். 61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை, நாள் 16.7.2009–ல் வெளியிடப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைளில் இணைப்பில் தற்போதுள்ள பத்தி எண். 5–க்கு பதிலாக கீழ்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

“5. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 19 சதவீதம் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி அல்லது நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் (Slums) வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.”

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
சட்டமன்ற பேரவை தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகம், சென்னை – 9.
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
அனைத்து அமைச்சர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்கள், சென்னை–9.
(அனைத்து அமைச்சர்களின் அலுவலகங்களுக்கும் )